# தேர்ச்சி – I
# வணிக அடிப்படைகளும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலும்

01) வணிகம் என்றால் என்ன என்ற வினாவிற்கு ஐந்து மாணவர்களால் தரப்பட்ட விடைகள் கீழ்வருமாறு அதனுள் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.
1. நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் எந்தவொரு கருமமும்.
2. நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கான எந்தவொரு கருமமும்.
3. உறுப்பினர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கான இலாபநோக்குடைய அனைத்துக் கருமங்களும்
4. இலாப, சமூக நோக்கத்துடன் நடைபெறும் அனைத்தும் கருமங்களும்
5. மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்ததி செய்வதற்கு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து வழங்குவதுடன் தொடர்புடைய இலாப நோக்குடைய, இலாப நோக்கமற்ற எல்லா பொருளாதாரக் கருமங்களும் ( )

02) மாஸ்லோவின் தேவைக்கோட்பாட்டின் படி நிறுவனம் ஒன்றினால் வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாத தேவை எது?
1. உடலியற் தேவை 2. பாதுகாப்புத் தேவை 3. சமூகத் தேவை
4. கௌரவத் தேவை 5. சுயகௌரவத் தேவை ( )

03) வணிகத்தின் மூலம் நிறைவேற்றப்படுவது பின்வருவனவற்றுள் எது ?
1. சமூகம் நிலைத்திருத்தல்
2. வணிகங்களின் வாழ்வுத்தன்மையை உறுதிப்படுத்தல்.
3. மனித தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
4. வளங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்துதல்.
5. மனிதன் நாகரீகமான முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ( )

04) கைத்தொழிற்புரட்சியின் விளைவாக வர்த்தகத்துறையிலும் உற்பத்தி துறையிலும் ஏற்பட்ட மாற்றங்கள் தரப்பட்டுள்ளது.
A– பேராளவு உற்பத்தி B தொழிற்சாலை முறைமை
C– சந்தை விரிவாக்கம் D– களஞ்சியப்படுத்தலில் நவீன முறைகள்
E– உபகரணங்களை பயன்படுத்துவதில் விருத்தி
F– புதிய தொழில்நுட்ப முறைகள் அறிமுகம்
G- அளவை நிறுவைக் கருவிகளின் தோற்றம்
மேலே கூறப்பட்டவற்றில் கைத்தொழிற் புரட்சியின் விளைவாக வர்த்தகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
1. ABC 2. CDB 3. CDG 4. BCD 5. DFG ( )

05) வணிகத்தின் பரிநாம வளர்ச்சிக்கட்டங்களை சரியான ஒழுங்கில் காட்டும் கூற்றினைத் தெரிவுசெய்க?
1. நேர் உற்பத்தி, பண்டமாற்று, நேரில் உற்பத்தி, வியாபாரம், பணப்பரிமாற்றம், இலத்திரனியல் வணிகம்.
2.நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி, பண்டமாற்று, பணம், வியாபாரம், இலத்திரனியல் வணிகம்.
3.நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி, பணப்பரிமாற்று, பண்டாற்று, இலத்திரனியல் வணிகம்.
4.நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி, பணப்பரிமாற்று, பண்டமாற்று, இலத்திரனியல் வணிகம்
5.நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி, பண்டமாற்று, வியாபாரம், பணப்பரிமாற்று, கைத்தொழில்புரட்சி, இலத்திரனியல் வணிகம் ( )

06) பின்வருவனவற்றில் முதல்நிலை உற்பத்தியின் கூறாக அமையாதது எது?

1. வேளாண்மை 2. கடலியல் 3. வனஇயல்
4. தயாரிப்பு 5. சுரங்கமறுத்தலும் அகழ்தலும் ( )

07) பின்வருவனவற்றில் ஒரு வணிகத்தின் முதன்மை நோக்கமாகக் கருதக் கூடியது எது?

1.சந்தைப்பங்கை அதிகரித்தல்
2.சந்தையில் நிலைத்திருத்தல்
3.இலாபத்தை உச்சப்படுத்துதல்
4.விற்பனை அதிகரித்தல்
5.வாடிக்கையாளரைத் திருப்தி செய்தல். ( )

08) முதல்நிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்பத்தி, மூன்றாம் நிலை உற்பத்தி ஆகியவற்றிக்கிடையில் ஏற்படுகின்ற தொடர்பு

1. வழங்கல் சங்கிலி
2. தொழிற்பிரிப்பு
3. உற்பத்திச்சங்கிலி
4. சிறப்புத்தேர்ச்சி
5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ( )

09) சந்தைவெளியில் கொடுக்கல்வாங்கல் செய்வதற்கு பயன்படுத்தும் பணம்

1. சட்டப்பணம் 2 வங்கிப்பணம் 3. போலிப்பணம்
4. இலத்திரனியல் பணம் 5. கடன் பணம் ( )

10) பாடசாலை அதிபர் ஒருவர் மாணவர்களுக்கான செயலமர்வுகளை நடாத்தும் நோக்கில் ஓர் பல்லூடகக்கருவி ஒன்றை கொள்வனவு செய்வார். இது ஒரு

1. கடைப்பொருள் 2. சிறப்புப்பொருள் 3. ஆடம்பரப்பொருள்
4. கைத்தொழிற்பொருள் 5. அத்தியவசியப்பொருள் ( )

11) தேவை விருப்பம் தொடர்பான பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A – பொதுத்தன்மை கொண்டவை B – உருவாக்கப்படுபவை
C – பல்லினத்தன்மையுடையவை D – அத்தியாவசியமானவை
E – வரையறுக்கப்படாதவை F – வரையறுக்கப்பட்டவை

மேலுள்ளவற்றுள் விருப்பம் தொடர்பான பண்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க

1. A,B,C 2. A,C,E 3. B,C,E 4. B,C,F 5. C,D,F ( )

12) மிகப்பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க

1. வியாபாரம் நேர் உற்பத்தியின் விளைவாகத் தோன்றியதாகும்
2. தனியாள் சிறப்புத் தேர்ச்சியின் பெறுபேறாக மிகை உற்பத்தி தோன்றியதாகும்
3. மிகை உற்பத்தியின் காரணமாக வியாபாரம் தோன்றியதாகும்
4. கைத்தொழில் புரட்சி காரணமாக சிறப்புத் தேர்ச்சி தோன்றியதாகும்
5. சிறப்பு தேர்ச்சி காரணமாக பாரியளவான உற்பத்திகள் தோன்றியதாகும் ( )

13) பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகச்செயற்பாடுகளும் Y நிரலில் இச் செயற்பாடுகளின் விளைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன

| X | Y |
|---|---|
| A – உற்பத்தி<br>B – சந்தைப்படுத்தல்<br>C – நிதி<br>D – நிர்வாகம்<br>E – ஆராய்ச்சி | 1. வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வது<br>2. வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய வெளியீட்டு முறைகளைத் தேடுதல்<br>3. வளங்களை பொருட்கள் அல்லது சேவைகளாக மாற்றுகின்ற செயன்முறை<br>4. ஆவணங்களைப் பராமரித்தல் தொடர்பாடல் கருமங்கள்<br>5. மூலதனத்தை பெறுதல் பயன்படுத்தல் கணக்கீட்டுச் செயற்பாடு |

X,Y நிரல்களின் இணைப்பைத் தெரிவு செய்க
1. A – 1 , B – 2, C – 5, D – 4, E – 3
2. A – 2, B – 1, C – 5, D – 4, E - 3
3. A – 3, B – 1, C – 5, D – 2, E - 4
4. A – 3, B – 1, C – 5, D – 4, E - 2
5. A – 1, B – 5, C – 4, D – 3, E – 2 ( )

14) வணிகத்தை வகைப்படுத்தும் நியதி அல்லாதது எது?
1. உற்பத்தி தன்மை அடிப்படையில்
2. உற்பத்தித்துறை அடிப்படையில்
3. அளவின் அடிப்படையில்
4. வாழ்தன்மை அடிப்படையில்
5. நோக்கத்தின் அடிப்படையில் ( )

15) விவசாயம், மீன்பிடி, சுரங்கமறுத்தல் போன்றவற்றை உள்ளடக்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்
1. விவசாய உற்பத்தி
2. கைத்தொழில் உற்பத்தி
3. முதனிலை உற்பத்தி
4. இரண்டாம் நிலை உற்பத்தி
5. மூன்றாம் நிலை உற்பத்தி ( )

16) 'வணிகம்' எனும் பதத்திற்கு மிகப்பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க
1. இலாபமீட்டுவதை நோக்கிற்கொண்ட செயற்பாடு எதுவும்
2. மனிதத்தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடு எதுவும்
3. விலைக்கு வாங்குவதுடனும் விற்றலுடனும் சம்பந்தப்பட்ட செயற்பாடு எதுவும்
4. பண்டங்களினதும் சேவைகளினதும் பரிமாற்றத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பாடு எதுவும்
5. முதலீட்டாளர்களின் ஒரு பொருளாதாரச் செயன்முறை எதுவும் ( )

17) பின்வருவனவற்றுள் மனித விருப்பத்தை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க
1. உணவு, உடை, வசிப்பிடம், பொழுதுபோக்கு
2. உடை, சோறு, கல்வி, மருந்து
3. மோட்டார் வாகனம், சோறு, பாடசாலை, பத்திரிகை
4. மோட்டார் வாகனம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி
5. கல்வி, போக்குவரத்து, பாடசாலை, பத்திரிகை ( )

18) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன

A - இலாபம் B – தொழில் பாதுகாப்பு C – சந்தைப்பங்கு
D – பதவி உயர்வு E – தொழில் அபிவிருத்தி F – வேலையில் திருப்தி
G – வணிகத்தின் வளர்ச்சி H – சம்பளம்

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது ஊழியர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க
1. B,D,E,H
2. D,E,F,H
3. A,B,C,F
4. B,E,F,H
5. B,D,F,H ( )

19) மனிதத்தேவை விருப்பங்களுக்குரிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் சரியான கூற்று எது?

1. மனிதத்தேவைகள் கட்டாயமானது, விருப்பங்கள் கட்டாயமன்று
2. தேவைகளுக்கு மாற்று வழிகள் உண்டு, விருப்பங்களுக்கு மாற்று வழிகள் இல்லை
3. தேவைகளைத் தோற்றுவிக்க முடியும், விருப்பங்களைத் தோற்றுவிக்க முடியாது
4. தேவைகள் அடிப்படையற்றது, விருப்பங்கள் அடிப்படையானது
5. தேவைகள் பல்வகைப்பட்டதாகும், விருப்பங்கள் பல்வகைப்பட்டதன்று ( )

20) பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காகக் பயன்படுத்தப்படும் குமாரின் வாகனத்திற்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஒரு சோடி இறப்பர் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இந்நிகழ்வு

1. வசதிப்பண்ட வகைக்குரியதாகும்
2. கடைப்பண்ட வகைக்குரியதாகும்
3. விஷேடபண்ட வகைக்குரியதாகும்
4. வணிகப்பண்ட வகைக்குரியதாகும்
5. நாடாப்பண்ட வகைக்குரியதாகும் ( )

21) பின்வரும் அட்டவணையில் X , Y ஆகிய நிரல்களில் முறையே உற்பத்தித்துறைகளும் அவற்றின் துணைப்பிரிவுகளும் காட்டப்பட்டுள்ளன

| X | Y |
|---|---|
| A – விவசாய உற்பத்தி<br>B – கைத்தொழில் உற்பத்தி<br>C – சேவை உற்பத்தி | 1. மீன்பிடிக்கைத்தொழில்<br>2. வனவளத்தொழில்<br>3. சுரங்கமறுத்தலும் தயாரிப்புத்தொழிலும்<br>4. போக்குவரத்தும் தொடர்பாடலும்<br>5. மின்சாரம், எரிவாயு, நீர்<br>6. வங்கி, காப்புறுதி, ஆதனவியாபாரம் |

X , Y ஆகியவற்றை சரியாக இணைக்கும் பொழுது பெறப்படும் சரியான விடைத்தொகுதியாக இருப்பது

1. A – 1,3 B – 2,5 C – 4,6
2. A – 1,3 B – 2,4 C – 5,6
3. A – 1,2 B – 3,5 C – 4,6
4. A – 1,4 B – 2,3 C – 5,6
5. A – 1,3 B – 2,6 C – 4, 5 ( )

22) நவீன தொழில்நுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடி உற்பத்தியின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்ள முடியும். இவ்வாறான இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்குரித்தான தொகுதியாக இருப்பது

1. முதன்நிலை அல்லது விவசாயத்துறையாகும்
2. இரண்டாம் நிலை அல்லது சேவைத்துறையாகும்
3. முதன்நிலை அல்லது கைத்தொழிற்துறையாகும்
4. இரண்டாம் நிலை அல்லது கைத்தொழில் துறையாகும்
5. மூன்றாம் நிலை அல்லது சேவைத்துறையாகும் ( )

23) மனிதனின் விருப்பங்கள் பல்வேறு வகைப்பட்டன. அவற்றை ஏற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக காரணி ஒன்றாக இருப்பது

1. வருமானமட்டம்
2. நடை உடை பாவனை
3. காலநிலைத்தன்மை
4. சம்பளமட்டம்
5. பால் வேறுபாடு ( )

24) பின்வரும் அட்டவணையில் பல்வேறு வகையான பொருள்களும் அவற்றின் பண்புகள் பலவும் காணப்படுகின்றன

| பொருள்கள் | பண்புகள் |
|---|---|
| A – இலகு<br>B – கடை<br>C – கைத்தொழில் | 1. விலையையும் குறியீட்டையும் ஒப்பிட்டுக்கொள்வனவு செய்யப்படும்<br>2. எண்ணங்கள் நுகர்வாக இருக்காது<br>3. ஒப்பிட்டறியாது தொடர்ந்து கொள்வனவு செய்தல் |

பொருள்களில் காணப்படும் பண்புகளைச் சரியாகப் பொருத்தும் போது காணப்படும் விடையாக அமைவது

1. A – 1 B – 2 C – 3 2. A – 2 B – 1 C – 3 3. A – 3 B – 1 C – 2
4. A – 2 B – 3 C – 1 5. A – 3 B – 2 C – 1 ( )

25)வணிகத்தின் வளர்ச்சியும் அதனுடனும் தொடர்புடைய உள்ளீடுகள் பல கீழே தரப்பட்டுள்ளன

(A) நேர் உற்பத்தியில் வணிகங்களைக் காணமுடியாது
(B) நேரில் உற்பத்தியின் போது மேலதிக உற்பத்தியொன்றைக் காணமுடியும்
(C) பல்லினத்தன்மை கொண்ட வணிகக்கட்டமைப்பினுள் வேறு பிரிவொன்றுக்குள் ஈடுபடுத்தப்படாமை
(D) உழைப்புப்பகிர்வானது சிறக்குமியல்பின் பெறுபேறொன்றாகும்

இவற்றுள் சரியான கூற்றாக இருப்பது

1. A மட்டும் 2. A யும் B யும் மட்டும் 3. A யும் D யும் மட்டும்
4. B யும் C யும் மட்டும் 5. C யும் D யும் மட்டும் ( )

26) 'நுகர்வோரது தேவை, விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு சமர்பிக்கப்படும் பெறுமதி கொண்ட எதுவுமே உற்பத்தி எனக்கூற முடியும்.

மேலேதரப்பட்டவற்றுள் உற்பத்தியின் வகையாகக் கருதமுடியாதது எது?

1. பொருட்கள், சேவைகள், எண்ணங்கள், தகவல்கள்
2. இடங்கள், தனிநபர், அமைப்புக்கள், அனுபவங்கள்
3. எண்ணங்கள், நிகழ்வுகள், ஆதனங்கள், சேவைகள்
4. மூலதனம், உழைப்பு, நிலம், முயற்சி
5. தனிநபர்கள், அமைப்புக்கள், அனுபவங்கள், பொருட்கள் ( )

27) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட மாற்றங்களுள் வர்த்தகத்துறையில் ஏற்பட்ட மாற்றம் எனக்கருதப்பட முடியாதது

1. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக விருத்தி
2. விநியோக முறைகளின் விருத்தி
3. தொழிற்சாலை முறைமை விருத்தி
4. துணைச்சேவைகளின் விருத்தி
5. மேம்படுத்தல் நடவடிக்கைகளின் விருத்தி ( )

28)உற்பத்தி அல்லது மீள்விற்பனை நோக்கங்களுக்காக வணிகர்களினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் பின்வருவனவற்றுள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

1. வசதிப்பொருட்கள் 2. கைத்தொழில் பொருட்கள் 3. கடைப்பொருட்கள்
4. நுகர்பொருட்கள் 5. விஷேட பொருட்கள் ( )

29) சுரங்கமறுத்தலும் அகழ்தலும் கட்டட நிர்மாணம் ஆகியவை உரித்தானவை

1. கைத்தொழில் துறைக்கு 2. விவசாயத்துறைக்கு
3. சேவைத்துறைக்கு 4. இரண்டாம் நிலை உற்பத்திக்கு
5. மூன்றாம் நிலை உற்பத்திக்கு ( )

30) வணிகங்கள் வெற்றிகரமானதாகக் காணப்படுவது பெரும்பாலும் அவை
1. உயர்ந்த இலாபத்தை உழைக்கும் போது
2. உயர்தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் போது
3. மிகச்சிறந்த ஊழியர்களை சம்பளத்திற்கு அமர்த்தும் போது
4. சமூகத்திற்குச் சில பங்களிப்புக்களை மேற்கொள்ளும் போது
5. மக்கள் விரும்புகின்ற பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யும் போது ( )

31) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன

A - இலாபம் B – தொழில் உற்பத்தி C – சந்தைப்பங்கு
D – வேலையில் திருப்தி E – பதவி உயர்வு F – தொழில் அபிவிருத்தி

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது ஊழியர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க

1. A,B,E,F 2. B,D,E,F 3. B,D,E
4. B,D,F 5. B,E ( )

32) பின்வருவனவற்றுள் மனித விருப்பங்களை மட்டும் கொண்ட தொகுதி
1.உணவு, உடை, வாழ்விடம், பொழுதுபோக்கு
2. உடை, புத்தகம், நீர், சோறு
3. புத்தகம், மோட்டார் வாகனம், சோறு, மருந்து
4. மோட்டார் வாகனம், உணவு, கைத்தொலைபேசி, கல்வி
5. கல்வி, மின்சாரம், நீர், உணவு ( )

33)பின்வருவனவற்றுள் இயற்கைச் சூழலில் காணப்படும் வரையறுக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்கதும், வரையறுக்கப்பட்ட புதுப்பிக்கத்தகாததுமான வகைகள் ஆகும்

A – காடு B – வைரம் C – மீன்
D – நிலக்கரி E – உணவு F – பெற்றோலியம்

மேற்கூறப்பட்டவற்றுள் வரையறுக்கப்பட்ட புதுப்பிக்கத்தகாத வளங்கள்

1. A,B,C,D,E மட்டும் 2. A,B,D,E மட்டும்
3. A,C,D மட்டும் 4. B,C,F மட்டும்
5. B,D,F மட்டும் ( )

34) வணிகச்செயன்முறையின் உள்ளீடு, செயற்பாடுகள், வெளியீடு முறைமையின் ஓர் உள்ளீடாகப் பின்வருவனவற்றுள் எது கருதப்படும்?

1. பொருட்கள் சேவைகள் 2. நிதியளிப்பு 3. சந்தைப்படுத்தல்
4. முயற்சியாண்மை 5. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் ( )

35) பின்வருவனவற்றுள் எந்த வரைவிலக்கணம் தவறானது
1. தேவைகள் - உயிர் வாழ்வதற்கு தேவையான உடல் உளரீதியான தேவைப்பாடுகள்
2. விருப்பம் - தேவையை பூர்த்தி செய்ய உள்ளார்ந்தமாக வழங்கப்படும் எதுவும்
3. உற்பத்திப்பொருள் - மனிததேவை, விருப்பத்தை நிறைவேற்ற வழங்கப்படும் எதுவும்
4. சந்தைக்கான உற்பத்தி – விற்பனை நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் உற்பத்தி
5. வசதிப்பொருள் - நுகர்வோர் அடிக்கடி கொள்வனவு செய்யும் பொருள் ( )

36) பின்வருவன மனிததேவை விருப்பங்கள் தொடர்பில் ஐந்து மாணவர்களினால் குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் ஆகும்

A – தேவைகளுக்கு மாற்று வழிகள் உண்டு, விருப்பங்களுக்கு மாற்று வழிகள் இல்லை.
B – தேவைகளை தோற்றுவிக்க முடியாது விருப்பங்களைத் தோற்றுவிக்க முடியும்
C – மனிததேவைகள் கட்டாயமானது, விருப்பங்கள் கட்டாயமற்றது
D – தேவைகள் அடிப்படையானது, விருப்பங்கள் அடிப்படையற்றது
E – தேவைகள் பல்வகைப்பட்டது விருப்பங்கள் பல்வகைப்பட்டதன்று

*மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி எது?*

*1.* ACD *2.* BCD *3.* BDE *4.* ADE *5.* CDE ( )

*37) கீழே தரப்பட்டுள்ள பகுதி 'அ' விற்கு மிகவும் பொருத்தப்பாடான விடயத்தினை பகுதி 'ஆ" விலிருந்து இணைக்கும் சரியான தொகுதி எது?*

| பகுதி 'அ' | பகுதி 'ஆ' |
|---|---|
| A – வசதிப்பண்டம் | 1. பற்பசை |
| B – கடைப்பண்டம் | 2. தங்கஆபரணம் |
| C – தனிச்சிறப்புப்பண்டம் | 3. வைத்தியாசாலைக்கான மருந்துகள் |
| D – நாடாப்பெறாப்பண்டம் | 4. பாதணிகள் |
| E – கைத்தொழில் பண்டம் | 5. புதியசஞ்சிகை |

*1.* A – 1, B – 2, C – 3, D – 4, E – 5
*2.* A – 2, B – 4, C – 5, D – 3, E – 1
*3.* A – 3, B – 2, C – 4, D – 1, E – 5
*4.* A – 4, B – 3, C – 2, D – 1, E – 5
*5.* A – 1, B – 4, C – 2, D – 5, E – 3 ( )

*38) கைத்தொழில் பொருட்களுக்கும் நுகர்வுப்பொருட்களுக்களுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடு பின்வருவனவற்றுள் எதனை அடிப்படையாகக் கொண்டது?*

1. பொருட்கள் பெறுமதி
2. பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கம்
3. பங்கீடு, மேம்படுத்தல் செய்யப்பட்ட நோக்கம்
4. கொள்வனவு செய்யப்பட்ட அளவும் தடவைகளும்
5. பொருட்களின் வாழ்க்கைக்காலம் ( )

*39) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லாக் கைத்தொழில்களையும் அடக்கியுள்ள மூன்று பிரிவுகளும் யாவை?*

1. தனியார், கூட்டுறவு, அரசு
2. சிறிய, நடுத்தர, பெரிய
3. சுரங்கம், நிர்மாணம், குடிசை
4. விவசாயம், கைத்தொழில் சேவை
5. சுரங்கம், உற்பத்தி, கட்டுமானம் ( )

*40) பின்வரும் அட்டவணையில் X மற்றும் Y நிரல்களானது நுகர்வோரின் தேவை, விருப்பத்தையும் அவற்றின் பண்புகளையும் எடுத்துக்காட்டுகின்றது*

| X | Y |
|---|---|
| A – தேவை<br>B – விருப்பம் | 1. வரையறுக்கப்பட்டவை<br>2. பல்வகைப்பட்டவை<br>3. பொதுத்தன்மை கொண்டவை<br>4. வரையறுக்குட்படாதவை<br>5. அத்தியாவசியமானவை<br>6. பரவலானவையாகக் காணப்படல் |

மேலே தரப்பட்ட அட்டவணையை கருத்திற்கொண்டு தேவை விருப்பத்திற்கும் அவற்றுக்கான பண்புகளுக்கும் மிகவும் பொருந்தக்கூடிய சரியான தொகுதியைத் தெரிவு செய்க

*1.* A – 1,2,3 B – 4,5,6
*2.* A – 1,3,5 B – 2,4,6
*3.* A – 4,5,6 B – 1,2,3
*4.* A – 1,3,6 B – 2,4,5
*5.* A – 2,3,5 B – 1,4,6 ( )

41) பின்வரும் அட்டவணையில் X நிரலில் உற்பத்தித்துறையும் Y நிரலில் அவற்றினது துணைப் பிரிவுகளும் குறிக்கப்பட்டுள்ளன

| X | Y |
|---|---|
| A – விவசாயம்<br>B – கைத்தொழில்<br>C – சேவை | 1. வங்கி, காப்புறுதி<br>2. கட்டிட நிர்மாணம்<br>3. கடற்றொழில்<br>4. உற்பத்திக்கைத்தொழில்<br>5. போக்குவரத்துத் தொடர்பாடல்<br>6. சுரங்கமறுத்தல் |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க

1. A – 4,6  B – 1,5  C – 2,3   2. A – 2,4  B – 3,6  C – 1,5   3. A – 2,3  B – 4,6  C – 1,5
4. A – 3,6  B – 2,4  C – 1,5   5. A – 4,6  B – 3,5 C – 1,2   (   )

42) ஏப்ரகாம் மாஸ்லோ எனும் உளவியலாளர் தனிநபர் தேவைகளை விளக்கியுள்ளார். அதன்படி தேவைகளின் பிரதான வகைகளும் அதன் கீழ் காணப்படக்கூடிய தேவைகளும் X,Y எனும் நிரல்களில் கீழே தரப்பட்டுள்ளது

| X | Y |
|---|---|
| A – பௌதீகத்தேவை | 1. ஆதரவும் பாதுகாப்பும் |
| B – பாதுகாப்புத்தேவை | 2. அன்பு |
| C – சமூகத்தேவை | 3. அங்கீகரிக்கப்படுதல் |
| D – தன்மதிப்புத்தேவை | 4. சமூகத்தில் உயர்நிலை |
| E – சுயநிறைவுத்தேவை | 5. வீடு |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க

1. A – 5  B – 1 C – 2 D – 3  E - 4   2. A – 2  B - 1 C – 5  D – 3  E - 4
3. A – 5  B – 2 C – 1  D – 3  E – 4   4. A – 5  B – 1 C – 2  D – 4 E -3
5. A – 5  B – 3 C – 4  D – 1  E – 2   (   )

43) பின்வருவன சேவைக்குரிய சில உதாரணங்களாகும்

A – வங்கி, காப்புறுதி , நிதிக்கம்பனிகளின் சேவை
B – கணக்காளர், வழக்கறிஞர், வைத்தியர் சேவை
C – முடியலங்காரம், முடிவெட்டுதல், காப்புறுதிச்சேவை
D – பாதணி, மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல்
இவற்றுள் எத்தொகுதி தனிநபர் அக்கறைச்சேவைகளை மாத்திரம் கொண்டுள்ளது?

1. A   2. B   3. C   4. D   5. E   (   )

44) பெறுமதியினை எவ்வாறு அளவிட முடியும்?

1. நலன்கள் / கிரயம்   2. கிரயம் / நலன்கள்   3. வெளியீடு / உள்ளீடு
4. உள்ளீடு / வெளியீடு   5. நலன்கள் / விற்பனை   (   )

45) உற்பத்திப்பொருட்களை வகைப்படுத்தல் எனும் தலைப்பின் கீழ் அமையும் 'எண்ணங்கள்" எனும் பதத்தின் பொருள்

1. தகவல் தொழில்நுட்பம்   2. முகாமை   3. செயல்முறை அறிவு
4. சந்தைப்படுத்தத்தக்க எண்ணக்கரு   5. அனுபவம்   (   )

46) பின்வரும் அட்டவணைக்கான பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க

| X | Y |
|---|---|
| 1. கேள்வி<br>2. பெறுமதி<br>3. திருப்தி<br>4. பரிமாற்றம்<br>5. கொடுக்கல் வாங்கல் | A – பெறுமதியானவற்றை கொடுத்து பெறுமதியானதைப் பெறுதல்<br>B – உற்பத்திப்பொருள்களை உபயோகித்து நுகர்வோர் காட்டும் துலங்கல்<br>C - இரு அல்லது பல கட்சியினரிடையே உற்பத்திப் பொருள்கள் பரிமாறப்படல்<br>D – தேவை, விருப்பங்களுக்குரிய பொருள்களைப் பெறுமதியைச் செலுத்திப் பெறக்கூடிய அளவு<br>E - உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக வாடிக்கையாளரின் மதிப்பீடு |

1. 1A ,2B, 3C, 4D, 5E
2. 1D ,2E, 3A, 4B, 5C
3. 1A, 2C, 3D, 4E, 5B
4. 1B, 2D, 3E, 4F, 5A
5. 1D, 2E, 3B, 4A, 5C ( )

47) நீண்டகால நிதிவழங்கல் தொடர்பான கருமங்கள் நடைபெறும் சந்தை
1. மூலதனச்சந்தை
2. மூலதனப்பொருளுக்கான சந்தை
3. நிதிச்சந்தை
4. கைத்தொழிற்சந்தை
5. பணச்சந்தை ( )

48) மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னோடியான Hentry ford 'ஒவ்வொரு மனிதரும் பெற்றுக் கொள்ளக்கூடிய போக்குவரத்து வாகனத்தைத் தயாரித்தல்" எனும் வாசகத்தைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாசகமானது
1. தூரநோக்கு
2. இலட்சிய நோக்கு
3. குறிக்கோள்
4. நோக்கம்
5. குறிக்கோளும் நோக்கமும் ( )

49)வணிகமொன்றில் அக்கறை கொண்டுள்ள தரப்பினரும் அவர்கள் அவ்வாறு அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணங்களும் X,Y நிரல்களில் காட்டப்பட்டுள்ளது

| X | Y |
|---|---|
| A – வாடிக்கையாளர் | 1. இலாபம், வளர்ச்சி |
| B – அரசு | 2. சம்பளம், கூலி |
| C – உரிமையாளர் | 3. விலை, தரம், சேவை |
| D – ஊழியர் | 4. மீளச்செலுத்துதல், வட்டி |
| E – கடன்கொடுத்தோர் | 5. வரிதொழில் வாய்ப்பு |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க
1. A 3, B5, C1, D2, E4
2. A5, B3, C1, D2, E4
3. A3, B1, C5, D2, E4
4. A4, B3, C1, D2, E5
5. A5, B1, C3, D4, E2 ( )

50) தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கான கருமம் இவ்வாறு அழைக்கப் படும்?
1. உற்பத்திகள் 2. பொருட்கள் 3. சேவைகள் 4. விருப்பங்கள் 5. வணிகம் ( )

51) பின்வரும் அட்டவணை வணிகவகைகளையும் அதற்கான அடிப்படைகளையும் காட்டுகின்றது

| வணிகவகை | வகைப்படுத்தலின் அடிப்படை |
|---|---|
| A – சிறிய நடுத்தர பாரிய வணிகங்கள்<br>B – 1ஆம் நிலை 2ஆம் நிலை 3ஆம் நிலை<br>C – விவசாயம், கைத்தொழில், சேவை<br>D - இலாப நோக்குடையவை, இலாப நோக்கற்றவை<br>E – தனியார் துறை, அரசதுறை | 1. தன்மையின் அடிப்படையில்<br>2. உற்பத்தித்துறையின் அடிப்படை<br>3. நோக்க அடிப்படை<br>4. அளவு அடிப்படை<br>5. உரிமையின் அடிப்படை |

இதன்படி சரியான வகைப்படுத்தலும், அதற்கான அடிப்படைகளும் எவை?

1. A – 5 B - 1 C – 2 D – 3 E - 4
2. A – 4 B – 1 C – 2 D – 3 E - 5
3. A – 4 B – 1 C – 2 D – 5 E -3
4. A – 4 B – 1 C – 3 D – 2 E – 5
5. A – 4 B – 2 C – 3 D – 5 E -1 ( )

52)பொருட்களைப் பாவனையின் அடிப்படையில் வகைப்படுத்தின்

1. விவசாயப் பொருட்கள், பொருளாதாரப் பொருட்கள்
2. நீண்டகாலப்பொருட்கள், குறுங்காலப்பொருட்கள்
3. மூலப்பொருட்கள், நுகர்வுப்பொருட்கள்
4. உற்பத்திப்பொருட்கள், நுகர்வுப்பொருட்கள்
5. அத்தியாவசியப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ( )

53) வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்துபவர்களும் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன

| | |
|---|---|
| 1. உரிமையாளர்<br>2. வாடிக்கையாளர்<br>3. ஊழியர்கள்<br>4. வழங்குநர்கள்<br>5. முகாமையாளர்கள் | A – பதவியுயர்வு<br>B – தீர்மானங்களின் வெற்றித்தன்மை<br>C – அபிவிருத்தி<br>D – பொறுப்புக்களை நிறைவேற்றல்<br>E - கட்டளைகளைத் தொடர்ந்து பெறல் |

வணிகம் தொடர்பாக அக்கறை கொள்பவர்களையும் அதற்கான காரணத்தையும் சரியாகக் காட்டுவது

1. 1 – C 2 – D 3 – A 4 – E 5 - B
2. 1 – C 2 – D 3 – A 4 – B 5 - E
3. 1 – E 2 – D 3 – A 4 – C 5 - B
4. 1 – C 2 – D 3 – B 4 – A 5 – E
5. 1 – D 2 – C 3 – A 4 – E 5 - B ( )

54)பின்வருவனவற்றுள் தேவைகள் - விருப்பங்கள் முறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

1. சுகாதாரம் - விசேட கல்வி
2. பாதுகாப்பு - இணையம்
3. பொழுதுபோக்கு – வைத்தியம்
4. கல்வி – தடுப்பூசி
5. மருத்துவர் - ஹோமியோபதி ( )

55) பொருட்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

* நுகர்வுப்பொருட்கள் * கைத்தொழிற்பொருட்கள்

இவ்வகைப்படுத்தலானது எவ்வாறு அழைக்கப்படுகின்றது

1. பயன்பாட்டு அடிப்படை
2. தன்மை அடிப்படை
3. துறை அடிப்படை
4. கட்டமைப்பு அடிப்படை
5. அளவு அடிப்படை ( )

56) மனிததேவை விருப்பத்திற்கான பண்டங்கள் சேவை வழங்குவதையும் இலாபம் உழைப்பு தையும் குறிக்கும் பதம்

1. முதனிலை கைத்தொழில்
2. இரண்டாம் நிலை கைத்தொழில்
3. மூன்றாம் நிலை கைத்தொழில்
4. வணிகம்
5. வர்த்தகம் ( )

57) பண்டமாற்று முறைமையிலிருந்து தோன்றியது

1. பணப்பாவனை   2. வங்கி   3. உற்பத்தி   4. வியாபாரம்   5. வர்த்தகம் (   )

58) வர்த்தகத்திற்கு சமனாக இருக்க முடிந்தது

1. முதனிலை உற்பத்தி   2. இரண்டாம் நிலை உற்பத்தி
3. மூன்றாம் நிலை உற்பத்தி   4. வியாபாரம்   5. துணைச்சேவை (   )

59) நீண்டகாலத்தில் நிறுவனம் அடைய விரும்புகின்ற விளைவு

1. இலக்கு   2. குறிக்கோள்   3. கொள்கை
4. தந்திரோபாயம்   5. இலாபம் (   )

60) தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமிடையே உள்ள பிரதான வேறுபாடுகளை காட்டும் கூற்றினைத் தெரிக

1. தேவைகள் பொதுவானவை ஆனால் விருப்பம் இன்றியமையாதவை
2. தேவைகள் இரண்டாம் பட்சமானவை ஆனால் விருப்பம் முதல் நிலைக்குரியவை
3. தேவைகள் பொதுவானவை ஆனால் விருப்பம் வரையறைக்குட்பட்டவை
4. தேவைகள் பொதுவானவை ஆனால் விருப்பம் பல விதமானவை
5. தேவைகள் வரையறுக்குட்படாதவை ஆனால் விருப்பங்கள் பலவிதமானவை (   )

61) தொழிற்பகுப்பு, சிறப்புத்தேர்ச்சி ஆகியவற்றோடு தொடர்புடைய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன

1. தொழிற்பகுப்பின் விளைவு மிகை உற்பத்தியும் சிறப்புத் தேர்ச்சி காரணமாக பரிமாற்றமும் ஏற்படும்
2. தொழிற்பகுப்பு சிறப்புத்தேர்ச்சி இரண்டினாலுமே மிகை உற்பத்தி உண்டாகும்
3. தொழிற்பகுப்பினால் சிறப்புத்தேர்ச்சியும் சிறப்புத்தேர்ச்சியினால் தொழிற்பகுப்பும் உண்டாகும்
4. தொழிற்பகுப்பு, சிறப்புத்தேர்ச்சி இரண்டினாலுமே வெளியீட்டின் வெளியீட்டு அளவு அதிகரிக்கின்றது
5. தொழிற்பகுப்பின் விளைவாக வெளியீடு அதிகரிக்கின்றதெனின் சிறப்புத்தேர்ச்சியின் விளைவாக துணைச்சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன

இவற்றுள் மிகச்சரியான கூற்றுக்கள்

1. i, iii, iv   2. i,iii,v   3. ii, iii, iv   4. ii, iv, v   5. iii, iv, v (   )

62) பின்வரும் செயற்பாட்டு நிகழ்வுகளின் எந்த நிகழ்வு உற்பத்தித்திறன் தன்மையை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்கின்றது

1. உள்ளீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருந்து வெளியீட்டை அதிகரித்தல்
2. வெளியீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருந்து உள்ளீட்டை குறைத்தல்
3. உள்ளீட்டை அதிகரிக்கும் அதேவேளையில் வெளியீட்டையும் அதிகரித்தல்
4. உள்ளீட்டை சிறிய அளவினால் அதிகரிக்கும் வேளையில் வெளியீட்டை பெரிய அளவினால் அதிகரித்தல்
5. உள்ளீட்டை பெரிய அளவினால் குறைத்து, வெளியீட்டை சிறிய அளவினால் குறைத்தல் (   )

63) நேர் உற்பத்தி என்பதன் பொருள்

1. வாடிக்கையாளரின் கட்டளையின் அடிப்படையிலான உற்பத்தி
2. ஆரம்ப உற்பத்தி
3. சந்தைக்கான உற்பத்தி
4. சொந்த நுகர்வுக்கான உற்பத்தி
5. நுகர்வோர் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமான உற்பத்தி (   )

64) மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்குப் பங்களிப்புச் செய்யும் மிகப்பிரதான காரணி

1. வியாபார நடவடிக்கைகளில் இருந்து   2. கணனித்தொழில்நுட்பத்தில் இருந்து
3. பணம், வங்கித்தொழில் என்பவற்றில் இருந்து   4. பூகோளமயமாக்கலில் இருந்து
5. சந்தைப்போட்டியில் இருந்து (   )

65) பின்வருவனவற்றில் எது வியாபார நோக்கம் அன்று?
1. ஊழியர் நலனை உச்சப்படுத்துவது
2. சந்தையில் பிழைத்து வாழ்வது
3. விற்பனைகளை உச்சப்படுத்துவது
4. சொந்தக்காரரின் தனிப்பட்ட திருப்தி
5. தொழிலாளியின் வருமானத்தை உச்சப்படுத்துவது ( )

66) குறித்த ஒரு பொருள் அல்லது சேவைக்கான கேள்வி தங்கியிருப்பது
1. அரசாங்க சட்டங்களிலாகும்
2. கூலிகளிலும் சம்பளங்களிலுமாகும்
3. விருப்பங்களிலும் பணஞ்செலுத்தக்கூடிய ஆற்றலிலுமாகும்
4. மொத்த நிரம்பல் ஆகும்
5. விநியோக வழிகளிலாகும் ( )

67) ஏனைய பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் பொருட்கள் ...................... என அழைக்கப்படுகின்றன
1. கைத்தொழில் பொருட்கள்
2. நுகர்வுப்பொருட்கள்
3. நீண்டகாலப் உபயோகப்பொருட்கள்
4. குறுங்கால உபயோகப் பொருட்கள்
5. நிரப்பிப்பொருட்கள் ( )

68) இன்னொன்றுக்காக ஒரு பொருளை அல்லது சேவையை வர்த்தகம் செய்வது ................. என அழைக்கப்படும்
1. பண்டமாற்று
2. மொத்த விற்பனை
3. சில்லறை விற்பனை
4. இறக்கியேற்றல் வியாபாரம்
5. அனுமதி பெற்ற வியாபாரம் ( )

69) இலத்திரன் வழி வணிகம் என்பதன் பொருள்
1. இணையத்தின் ஊடாக வியாபார நடவடிக்கைகளைச் செய்வது ஆகும்
2. நவீன தொழில்நுட்பத்திற்கு ஊடாக வியாபார நடவடிக்கைகளைச் செய்வதாகும்
3. வணிக நடவடிக்கைகளுக்குக் கணனிகளைப் பயன்படுத்துவது ஆகும்
4. தொலைபேசி ஊடாக வியாபார நடவடிக்கைகளைச் செய்வது ஆகும்
5. தொலைகாட்சி ஊடாக வியாபார நடவடிக்கைகளைச் செய்வது ஆகும் ( )

70) வசதிப்பொருட்களை அடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க
1. தளபாடம் / உடுப்பு / வானொலி
2. சவர்க்காரம் / பாலுணவு / புதினப்பத்திரிகை
3. படப்பிடிப்புக்கருவி / இசைக்கருவி / மோட்டார் வாகனம்
4. உடுப்பு / புதினப்பத்திரிகை / பற்பசை
5. தளபாடம் / நிழற்பிரதி இயந்திரம் / ஆபரணங்கள் ( )

71) வியாபாரம் பின்வருவனவற்றுள் எதன் விளைவாக ஆரம்பித்தது?
1. பணத்தின் உபயோகம்
2. கைத்தொழில் புரட்சி
3. சிறப்புத்தேர்ச்சி
4. பண்டமாற்று முறைமை
5. துணைச்சேவைகள் ( )

72) நேரில் உற்பத்தியாவது எது?
1. சுயநுகர்வுக்கான உற்பத்தி
2. சந்தைக்கான உற்பத்தி
3. முதனிலை உற்பத்தி
4. இடைநிலை உற்பத்தி
5. மூன்றாம் நிலை உற்பத்தி ( )

73) பின்வருவனவற்றுள் உற்பத்தி (Product) ஒன்றாகக் கருதப்பட முடியாதது எது
1. மூலதனம் (capital)
2. சேவைகள் (Services)
3. கருத்துகள் (ideas)
4. இடங்கள் (Places)
5. செயற்பாடுகள் (Activities) ( )

74) உண்டிச்சாலை உரிமையாளரொருவர் தனது உண்டிச்சாலையின் உபயோகத்திற்கென தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார். இத் தொலைக்காட்சிப்பெட்டி பின்வரும் வகுதிகளுள் எதனைச் சேர்ந்தது?
1. வசதிப்பொருள்கள்
2. கடைப்பொருள்கள்
3. கைத்தொழில் (வணிகப்)பொருள்கள்
4. சிறப்புப்பொருள்கள்
5. மேற்கூறிய எவையுமன்று ( )

75) தொழிற்பிரிப்பின் ஒரு பெறுபேறு?

1. தனியாள் சிறப்புத்தேர்ச்சி
2. நிறுவன சிறப்புத்தேர்ச்சி
3. பிரதேசச்சிறப்புத்தேர்ச்சி
4. தேசிய சிறப்புத்தேர்ச்சி
5. மேற்போந்த அனைத்தும் ( )

76) மூன்றாம் நிலை உற்பத்தியை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க

1. விவசாயம் / போக்குவரத்து / வங்கித்தொழில் / சுற்றுலா
2. போக்குவரத்து / களஞ்சியப்படுத்தல் / தொடர்பாடல் / காப்புறுதி
3. களஞ்சியப்படுத்தல் / போக்குவரத்து / காப்புறுதி / கட்டடநிர்மாணம்
4. கட்டடநிர்மாணம் / மீன்பிடித்தொழில் / தொடர்பாடல் / காப்புறுதி
5. விவசாயம் / போக்குவரத்து / கட்டடநிர்மாணம் / மீன்பிடித்தொழில் ( )

77) உலகமயமாக்கல் என்பதால் கருதப்படும் நிகழ்வானது

1. உலகம் பௌதீக ரீதியிற் சிறிதாகும்
2. நாடுகள் வியாபாரத்தின் பொருட்டு ஒன்று சேர்த்தல்
3. உலகளாவிய ரீதியில் தொழில்முயற்சிகள் ஒன்றையொன்று சார்ந்தவையாகவும் ஒன்றுடனொன்று இணைந்தவையாகவும் ஆதல்
4. உலகின் ஒழுங்கு முறைமையை முறியடிப்பதற்கான நாடுகளின் தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்த்தல்
5. உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் தனியொரு நாணயத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் ( )

78) சந்தைக்கான உற்பத்திக்கு வழங்கும் பெயர்

1. நேர் உற்பத்தி
2. கட்டளையொன்றுக்கான உற்பத்தி (Job Production)
3. நேரில் உற்பத்தி
4. தொகுதி உற்பத்தி (Batch Production)
5. முதனிலை உற்பத்தி ( )

79) பின்வருவனவற்றுள் துணைச்சேவை (Auxiliary Service) ஒன்றாகக் கருதப்பட முடியாதது எது?

1. மொத்த விற்பனை
2. போக்குவரத்து
3. காப்புறுதி
4. தொடர்பாடல்
5. வங்கித்தொழில் ( )

80) மனித வாழ்வதற்கு மிக அவசியமானவை

1. விருப்பங்கள்
2. தேவைகள்
3. சோறும் கறியும்
4. தளபாடம்
5. சப்பாத்துக்கள் ( )

81) பின்வருவனவற்றுள் சேவையொன்றின் சிறப்பியல்பாக அமையாதது எது?

1. தொட்டுணர முடியாத தன்மை
2. பிரிக்க முடியாத தன்மை
3. நீடித்துழைக்கும் தன்மை
4. வேறுபடும் தன்மை
5. களஞ்சியப்படுத்த முடியாமை ( )

82) கடற்பேரலைகளின் (Tsunami) பாதிப்புக்கு உட்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் பணி பின்வரும் துறைகளுள் எதனைச் சேரும்?

1. முதனிலைக்கைத்தொழில்
2. 2ம் நிலைக் கைத்தொழில்
3. 3ம் நிலைக்கைத்தொழில்
4. அரசகைத்தொழில்
5. தனியார் கைத்தொழில் ( )

83) ‘சந்தை” என்பதன் மிகச்சரியான கருத்தை வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவு செய்க

1. அது பண்டங்களும் சேவைகளும் விற்கப்படும் ஓர் இடமாகும்
2. அது குறித்த ஒரு பண்டத்தை அல்லது சேவையை விற்கும் விற்பனையாளர்களின் ஒரு தொகுதியாகும்
3. அது கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் ஒன்று கூட்டும் ஏதேனுமொரு நிலைமையாகும்

4. அது குறித்த ஒரு பண்டம் அல்லது சேவையைக் கொள்வனவு செய்பவர்களின் ஒரு தொகுதியாகும்
5. அது நுகர்வுப் பண்டங்களுக்கும் சேவைகளுக்குமான ஒரு கேள்வி அல்லது நிரம்பல் நிலைமையாகும் ( )

84) ஒரு சமுதாயத்தின் விருப்பங்கள் அல்லது தேவைகளை நிறைவு செய்வதற்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்குகின்ற அதேவேளை இலாபத்தை உருவாக்குகின்றதுமான பதத்தைத் தெரிவு செய்க

1. முதனிலைக்கைத்தொழில்
2. 2ம் நிலைக்கைத்தொழில்
3. 3ம் நிலைக்கைத்தொழில்
4. வணிகம்
5. வியாபாரம் ( )

85) பண்டமாற்று முறைமையுடன் தோன்றியது எது?

1. பணப்பாவனை
2. வங்கித்தொழில்
3. உற்பத்தி
4. வியாபாரம்
5. வர்த்தகம் ( )

86) மக்கள் சாதாரணமாகக் கொள்வனவு செய்வதற்குச் சிந்திக்காத உற்பத்திப்பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1. வசதிப்பொருட்கள் (Convenience goods)
2. கடைப்பொருட்கள் (Shopping goods)
3. விசேடபொருட்கள் (Speciality goods)
4. நாடாப்பெறாப் பொருட்கள் (Unsought goods)
5. இழிப்பொருட்கள் (inferior goods) ( )

87) பின்வருவன வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகள் சிலவாகும்.

A– சமூக கலாச்சாரம் B– அமைப்புக்கலாச்சாரம்
C– நிர்வாகிகள் C– தொழில் தருனர்கள்
E– அரச கொள்கைகள் F– பொருளாதார நிலமைகள்

மேலே கூறப்பட்டவற்றில் நிறுவன கட்டப்பாட்டிற்கு உட்பட்ட விசைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, C 2) B, C, E 3) B,D,E 4) B,C,D 5) A,B,F ( )

88) பின்வரும் அட்டவணை ஆனது வணிகம் ஒன்றின் பேராண்மைச் சூழலை X நிரலிலும் அவற்றின் துணைக்காரணிகளை Y நிரலிலும் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A.சமூகச்சுசூழல் | 1.பணவீக்கம் வேலைவாய்ப்பு |
| B. இயற்கைச்சூழல் | 2. சமூகநடைமுறை, தனிநபர் நம்பிக்கை |
| C. பொருளாதாரச்சூழல் | 3.வீட்டுச்சுழல், குடும்ப அமைப்பு |
| D. மக்கள் சூழல் | 4. வளப்பாற்றாக்குறை, சூழல் மாசடைதல் |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

1. A-1, B-2, C-3, D-4
2. A-4, B-1, C-2, D-3
3. A-2, B-4, C-1, D-3
4. A-2, B-4,C-3, D-1
5. A-2, B-3,C-4, D-1 ( )

89) சூழல் மாசடைதல் தொடர்பில் அண்மைக்காலமாகப் பேசப்படும் முக்கிய விடயமாகக் கருதப்படுவது.

1 அதிகரித்த தொழிற்சாலை கழிவுகள்
2 அதிகரித்த பொலித்தீன் பாவனை
3 வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் புகைகள்
4 நகரமயமாக்கம்
5 கடளித்தல் ( )

90) வணிகச்சூழல் வகைகளும் அதற்குரிய காரணிகளும் கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வேலைச்சூழலுக்குரியதை மட்டும் உள்ளடக்கிய காரணித்தொகுதியைத் தெரிவு செய்க

1. வாடிக்கையாளர்கள் / சமூகக்கலாச்சாரம்
2. சமூகக்கலாச்சாரம் / நிறுவனக்கட்டமைப்பு
3. பல்வகை முதலீட்டாளர்கள் / வாடிக்கையாளர்கள்
4. பல்வகை முதலீட்டாளர்கள் / நிறுவனக்கட்டமைப்பு
5. நிறுவனக்கட்டமைப்பு / சமூகக்கலாச்சாரம் ( )

91) வணிகமொன்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தும் அண்மிய சூழல் காரணியாக இருப்பது

1. உரிமையாளராவார்
2. போட்டியாளராவார்
3. நிலையான முதலீட்டாளர்களாவார்
4. வாடிக்கையாளராவார்
5. வழங்குநராவார் ( )

92) பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை பொருந்தும் போது சரியாகக் கிடைக்கும் விடைத்தொகுதியாக இருப்பது

| அக்கறை செலுத்தும் பிரிவினர் | அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் |
|---|---|
| A – உரிமையாளர் | 1. பிணைகள் பாதுகாப்பானது |
| B – முகாமையாளர் | 2. கடனை மீள அறவிட்டுக்கொள்ளல் |
| C – ஊழியர்கள் | 3. சந்தைப்பங்கு |
| D – வழங்குநர்கள் | 4. தொழில் திருப்தி |
| E – கடன் வழங்குனர்கள் | 5. கடந்தகால தீர்மானங்களின் வெற்றி |

1. A – 4 B – 1 C – 2 D – 3 E – 5
2. A – 3 B – 4 C – 1 D – 5 E - 2
3. A – 2 B – 5 C – 3 D – 1 E – 4
4. A – 1 B – 2 C – 3 D – 4 E - 5
5. A – 3 B – 5 C – 4 D – 2 E - 1 ( )

93) பின்வருவன வணிக சூழலில் நிகழும் சில செயற்பாடுகள் ஆகும்

A – முகாமையாளர் பொருத்தமான தீர்மானங்களை எடுத்தல்
B – அரசு மானியங்களை இடைநிறுத்தல்
C – அரசியல் சூழ்நிலைகள் சாதகமாக மாறிவருதல்
D – ஊழியவளம் செயற்திறனற்று காணப்படுதல்
E – புதிய போட்டியாளரின் வருகை
F – உரிமையாளர், அறிவு, அனுபவம் உடையவராக இருத்தல்

மேற்கூறப்பட்டவற்றுள் சுவட்டாய்வின் அச்சுறுத்தல் எனக் கருதக்கூடியவை

1. A,C என்பன
2. B,D என்பன
3. D,F என்பன
4. A,F என்பன
5. B,E என்பன ( )

94) உள்ளூராட்சித் தேர்தலின் போது பொலித்தீன் அலங்காரங்களும் பதாகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன என்ற பத்திரிகைச் செய்தியில் நீர் அவதானிக்கும் பேரின் வணிகச்சூழல்கள் எவை என கருதுகின்றீர்?

1. மக்கள் சூழல், பொருளியல் சூழல்
2. அரசியல் சட்டச்சூழல், இயற்கைச்சூழல்
3. சமூககலாச்சாரச்சூழல், இயற்கைச்சூழல்
4. அரசியல் சட்டசூழல், பொருளியல் சூழல்
5. பூகோளக்சூழல், விஞ்ஞானதொழில்நுட்பச்சூழல் ( )

95) பின்வரும் அட்டவணையில் X நிரலில் பேரினச்சூழல் காரணிகளும் Y நிரலில் அதனடன் தொடர்புடைய சில செயற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன

| X | Y |
|---|---|
| A – தொழில்நுட்பச்சூழல் | 1. உள்நாட்டுக் கலாச்சாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல் |
| B – சமூககலாச்சாரச்சூழல் | 2. அடுத்த மாதம் சமையல் வாயுவின் விலை உயரும் |
| C – அரசியல் சட்டச்சூழல் | 3. உற்பத்தித்துறையில் றோபோ இயந்திரம் |
| D – பூகோளச்சூழல் | 4. முதியோரை நினைவுகளும் விசேட நிகழ்வ |
| E – பொருளாதாரச்சூழல் | 5. உட்கட்டமைப்பு அபிவிருத்தி கொள்கை |

X , Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க

1. A – 1 B – 4 C – 2 D – 5 E - 3
2. A – 3 B – 1 C – 5 D – 2 E - 4
3. A – 3 B – 1 C – 5 D – 4 E - 2
4. A – 3 B – 4 C – 5 D – 1 E - 2
5. A – 5 B – 1 C – 2 D – 3 E - 4 ( )

96) பின்வருவன வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய சூழல் சக்திகளாகும்

A – வாடிக்கையாளர்கள்
B – அமைப்பு கலாச்சாரம்
C – போட்டியாளர்கள்
D – வழங்குநர்கள்
E – பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர்கள்
F – அமைப்பு முறை

மேலுள்ளவற்றுள் வணிக வேலைச்சூழல் சக்திகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க

1. A,B,C,D 2. A,C,D,E 3. A,C,D,F 4. B,C,D,E 5. B,C,D,F ( )

97) வணிகச்செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் இணையம், இலத்திரனியல்தபால், இலத்திரனியல் வங்கித்தொழில் போன்றவற்றின் வாயிலாக ஏற்படும் சூழல் பின்வருவனவற்றுள் எது?

1. பொருளாதாரச்சூழல்
2. சமூககலாச்சாரச்சூழல்
3. சட்டச்சூழல்
4. விஞ்ஞான தொழில்நுட்பச்சூழல்
4. அரசியல் சூழல் ( )

98) சமூகக்கலாச்சாரக் காரணிகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க

1. தனிநபர் நம்பிக்கை, பெறுமதிகள், எதிர்பார்ப்புக்கள்
2. சம்பளமட்டங்கள், வாழ்க்கைச்செலவு, விலைமட்டம்
3. பிரமாணங்கள், விலைகள், வாழ்க்கைத்தரம்
4. சம்பளம், பழக்கங்கள், தொழில்நுட்பம்
5. வாழ்க்கைச்செலவு, மனப்பாங்குகள், பழக்கங்கள் ( )

99) * மசகு எண்ணெயில் விலையுயர்வால் ஏனைய பொருட்களின் விலையும் உயர்வடைந்தது
* புதிய பொருட்களின் வருகையால் பழைய பொருட்கள் சந்தையிலிருந்து விலகின
* தைப்பொங்கலை முன்னிட்டு பட்டாசு, சர்க்கரையின் கேள்வி உயர்வடைந்தது

மேற்கூறிய மூன்று சம்பவங்களுடனும் தொடர்படைய வணிகச்சூழலைக் சரியாகக் காட்டும் தொகுதி

1. பொருளாதாரச்சூழல் , மக்கட்சூழல், கலாச்சாரச்சூழல்
2. பொருளாதாரச்சூழல், இயற்கைச்சூழல், மக்கட்சூழல்
3. பொருளாதாரச்சூழல், தொழில்நுட்பச்சூழல், மக்கட்சூழல்
4. பொருளாதாரச்சூழல், தொழில்நுட்பச்சூழல், சமூககலாச்சாரச்சூழல் ( )

100) பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் சிற்றினச்சூழலில் காணப்படுகின்ற விசை எது?

1. பொருளாதாரம்
2. சமூகப்பண்பாடு (Sociocultural)
3. அரசியலும் சட்டமும்
4. போட்டி
5. தொழினுட்பம் (Technological) ( )

101) அண்மிய சூழலைச் சரியாகக் காட்டுந் தொகுதி
1. வழங்குநர், வாடிக்கையாளர், முகாமையாளர்
2. போட்டியாளர், புதிய வணிகர், தொழிலாளர்
3. போட்டியாளர், உரிமையாளர், வாடிக்கையாளர்
4. போட்டியாளர், வழங்குநர், வாடிக்கையாளர்கள் ( )

102) பின்வருவனவற்றுள் மக்கட்சூழலைச் சேர்ந்ததாக உள்ளது எது?
1. நம்பிக்கைகள் 2. சமயம் 3. வழமைகள் 4. வயதுக்கலப்பு 5. நியமங்கள் ( )

103)புதுப்பிக்கப்பட முடியாததும் ஓர் எல்லைக்குட்பட்டதுமான இயற்கைவளம் பின்வருவனவற்றுள் எது?
1. பெற்றோலியம் 2. காடு 3. நீர் 4. உணவுவகைகள் 5. காற்று

104) சூழற்காரணிகள் சில கீரே தரப்பட்டுள்ளன
அ) முகாமையாளர்கள் ஆ) தொழில்நுற்பம் இ) பொருளாதாரம்
ஈ) ஊழியர்கள் உ) மக்கட்தொகை
மேற்போன்றவற்றுள் கட்டுப்படுத்த முடியாதவையாகக் கருதப்படும் காரணிகள் எவை?
1. அ,ஆ,இ 2. ஆ,ஈ,உ 3. ஆ,இ,ஈ 4. ஆ,இ,உ 5. இ,ஈ,உ ( )

105) மக்கட்சூழலின் ஒரு முக்கியமான கூறு சனத்தொகையாகும் இலங்கையின் சனத்தொகை வீச்சு யாது?
1. 15 – 16 மில்லியன் 2. 16 – 17 மில்லியன் 3. 19 – 20 மில்லியன்
4. 21 – 22 மில்லியன் 5. 23 – 24 மில்லியன் ( )

106) நேரில் உற்பத்தியின் கூறுகளாக ……………………………,……………………………இ ……………………… காணப்படுகின்றது.

107) மனித தேவையொன்ளைப்பூர்த்தி செய்வதற்கு ……………………….. உடன் ஏற்படுகின்ற விருப்பம்……………………….. ஆகும்.

108) கட்புலனாக உற்பத்திக்கான வணிகம் ………………………….. எனவும் கட்புலனபக உற்பத்திகள்………………………….. எனவும் அழைக்கப்படம்.

109) வேறுபொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் …………………………………………………………. ஆகக் கருதப்படுவதுடன் இன்னொன்றுக்காக ஒரு பொருள் அல்லது சேவையை வர்த்தகம் செய்வது ………………………………. ……………………………… எனப்படும்

110) இலாபம், வணிகத்தின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி என்பவற்றிக்காக வணிகம் தொடர்பாக அக்கறையுடையவர் ஒரு ………………………………………… எனப்படுபவார்

111) வணிகமொன்றின் ஆரம்பத்திற்கும், வாழ்தன்மைக்கும் தேவையான அகரீதியான பிரிவினர்கள் ……………………………………………………………. இருப்பதுடன் வணிகத்தின் வாழ்தன்மைக்கு உரிய புறப்பிரிவினர்களாக இருப்பது ……………………………………………………………………………

112) மனிதருடைய ……………………………………………. மீதன்றி மனிதருடைய ……… ……………………………………… மீதே வணிகங்கள் அதிக அக்கறை கொள்கின்றன

113) இது என்ன வணிகம், இதன் வாடிக்கையாளர் யார்? ஆதன் தன்மை என்ன? என்பனவற்றை வெளிக்காட்டி நிற்கும் கூற்று ……………………………………………………… என்பதாகும்

114) அ) ……………………………………………… மற்றும் ……………………………… என்பன ஒரு உற்பத்திப்பொருள் தொடர்பாகக் கேள்வியை உருவாக்கும் இரு காரணிகள் ஆகும்

ஆ)உற்பத்திச்செயன்முறையில் பயன்படுத்தப்படும் பொருள் ………………………………. எனப்படும்

115)வியாபாரத்தினதும் வணிகச்சேவைகளினதும் சேர்க்கை ......……………………என்பதுடன் வர்த்தகம்,கைத்தொழில்என்பனவற்றின்சேர்க்கை……………………………………… என அழைக்கப்படும்

116) கைத்தொழில் புரட்சியின் வினைவாக………………………………………தொடங்கியது

117) உற்பத்திக்காரணிகளாக நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகியவை மட்டுமன்றி இவற்றுடன்.........................................................................……………………………… ஆகியவையும் உற்பத்திக்காரணிகளாக கருதப்படுகின்றன

118)வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் என்பன ………………………………… பிரிவுகளாக கருதப்படும்

119) (அ). பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினருள், வணிகங்கள் தமது பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக …………………… மீது அக்கறை செலுத்துகின்ற அதேவேளை தொடர்ச்சியாக தேவைப்படுகின்ற நிதியினைப்பெற்றுக்கொள்வதற்காக………………………………………இன் மீது அக்கறை கொள்கின்றன

(ஆ) மனிதனால் கட்டாயமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய உடல், உளரீதியான நிலைமை …………………………………… என அழைக்கப்படுவதுடன் தேவை யினை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகள் ………………… ……………………….. என அழைக்கப்படும்

120) குறித்த பொருள் அல்லது சேவைக்கான ஒருவரது விருப்பமும் அதனை விலை கொடுத்து வாங்கவுள்ள ஆற்றலும் ……………………………………………எனப்படும்

121) வணிகமொன்றை நடத்திச் செல்லுதல் தொடர்பில் நடைமுறைப்படுத்துகின்ற விதிகள் அல்லது நியமங்கள் …………………………….........................என அழைக்கப்படும்

122) இணைய தொழினுட்பத்தில் தொடர்பு கொள்ளப்பயன்படுதப்படுகின்ற ஏதாவது வணிகச் செய்முறை …………………………………………என அழைக்கப்படும்

123) வணிகமொன்றின் அக்கறை செலுத்தும் நான்கு பிரிவினர்களைப் பெயரிடுக

1. …………………………………….  2. ……………………………….
3. …………………………………….  4. ……………………………….

124) வணிகத்தின் நவீன வளர்ச்சிப்போக்குகள் நான்கு எழுதுக

1. …………………………………….  2. ……………………………….
3. …………………………………….  4. ……………………………….

125) கைத்தொழில் புரட்சியுடன் வணிகத்துறையில் இணைந்த இரண்டு துறைச்சேவைகளைக் குறிப்பிடுக

1. …………………………………….  2. ……………………………….

126) ஒருவரிடம் காணப்படும் உற்பத்திப்பொருளொன்றை மற்றொர் நபருக்கு உரிமையுடன் பரிமாற்றம் செய்யும் முறையானது எப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றது?
………………………………………………………………………………………

127) வணிகநோக்கங்கள் நான்கைப் பெயரிடுக?
1. ……………………………………… 2. ………………………………..
3. ……………………………………… 4. ………………………………..

128) பொருட்களுடன் ஒப்பிடும் பொழுது சேவைகளின் நான்கு வித்தியாசமான சிறப்பியல்புகளைப் பெயரிடுக?
1. ……………………………………… 2. ………………………………..
3. ……………………………………… 4. ………………………………..

129) …………………………………… மற்றும் ……………………………… என்பன ஒரு உற்பத்திப்பொருள் தொடர்பாகக் கேள்வியை உருவாக்கும் இரு காரணிகள் ஆகும்

130) இலங்கையில் மொத்த தேசிய உற்பத்தியில் உயர்ந்த பங்களிப்பை வழங்கும் மூன்று பிரதான துறைகளை இதன் முக்கியத்துவவரிசை அடிப்படையில் குறிப்பிடுக?
…………………………………………………………………………

131) பண்டம் ஒன்றுடன் ஒப்பிடும் பொழுது சேவையொன்றின் இரு சிறப்பியல்புகளாக அமைவன
1. ……………………………………… 2. ……………………………

132) வியாபாரம் தோன்றியது ……………………………………………… என்பதிலிருந்து ஆகும்

133) மூலப்பொருள்களும் உதிரிப்பாகங்களும், மூலதன உருப்படிகள், கைத்தொழிற்சேவைகள் என்பவை ……………………………………… பொருள்களாகக் கருதப்படும்

134) குறித்தவொரு உற்பத்திப்பொருளை உற்பத்தி செய்வதில் குறித்தவொரு நாடு கொண்டுள்ள நிபுணத்துவத்திற்கு வழங்கும் பெயர் …………………………………… ஆகும்

135) கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் இணைக்கும் ஏதேனும் நிலைமை ……………………………………………… என அழைக்கப்படும்

136) பிரச்சினை வாய்ப்பாகும் தீர்வு ……………………………………………ஆகும்

139)இணையத்தொழினுட்பத்தில் தொடர்புகொள்ளப்பயன்படுத்துகின்ற ஏதாவது வணிகச் செய்முறை ……………………………………… என அழைக்கப்படும்

138) நுகர்வுப்பொருட்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும் அவை எவை?
1. ……………………………………… 2. …………………………….....
3. ……………………………………… 4. …………………………........

139) வணிகமொன்றின் புறச்சூழலுடன் இணைந்ததாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் தொகுதி யொன்றாக …………………………………………………. காணப்படுகின்றது

140) போட்டியாளர்களும் வழங்குனர்களும் ……………………………… சூழற்காரணிகளாக இருப்பதுடன் உரிமையாளர்களும், ஊழியர்களும் ………………………………………… சூழற்காரணிகளுக்குரித்துடையவர்களாவார்

141) வணிகமொன்றின் பலங்கள், பலவீனங்களை இனங்காணக்கூடியதாக இருப்பது ........................................ சூழலை அறிந்து கொள்வதன் மூலமாக இருப்பதுடன் வணிகத்தின் புறச்சூழலை அறிந்து கொள்வதன் மூலம் ......................................உம் இனங்காண முடியும்

142) அகச்சூழல் பகுப்பாய்வின் போது செயற்றிறன் கொண்ட வெற்றிகரமான தலைமைத்துவ மானது வணிகமொன்றின் .................................... ஆக இருப்பதுடன் திறமையற்ற ஊழியர்கள் இல்லாமல் இருப்பதும் வணிகமொன்றின் ..................................... ஆகும்

143) பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினர்கள், வணிகங்கள் தமது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துவதற்காக ..........................மீது அக்கறை செலுத்துகின்றன

144) அகச்சூழலை ஆய்வு செய்வதனால் ........................... , ............................... என்பவற்றையும் புறச்சூழலை ஆய்வு செய்வதனால் ........................... , ............... ............. என்பவற்றையும் இனங்காணமுடியும்

146) வணிகங்களில் ஒரு சாராரிடமிருந்து கையளிக்கப்படுகின்ற நம்பிக்கைகள், பழக்கங்கள் என்பன ............................................................. என அழைக்கப்படும்

147) வணிகநடவடிக்கைகளில் மீது தாக்கம் செலுத்தும் சூழலை .................... , ........................ என பிரதானமாக வகைப்படுத்துவதோடு அவற்றை ஆய்வுசெய்வதன் மூலம் ............................., ................................., ....................., ............................. என்பவற்றை அறிந்து கொள்ளலாம்

148) சூழல் மாசடைதலை இழிவளவாக்குதல் அல்லது தவிர்த்தல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு வழங்கும் பெயர் யாது?

.....................................................................................................................

149) ஒரு வணிக நிறுவகத்தின் உரிமையாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சமுதாயம் என்பவை ..........................................................என அழைக்கப்படும்

150) ......................................... ஐயும் ........................................... ஐயும் புறச்சூழலைப்பற்றி அறிந்து கொள்வதனால் அடையாளப்படுத்த முடியும்